| | |
|---|---|
| **OS.No_** | **7/2023 (DW1)_** |
| **நாள்_** | **29.07.2026_** |
| **பெயர்_** | **கெஜலட்சுமி_** |

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

வாதி இந்த வழக்கில் என்ன பரிகாரம் கோரியிருக்கிறார் என்று தெரியுமா என்றால். தெரியாது. என் மகள் கடன் வாங்கினால் அவர் கொடுக்க முடியவில்லை. அதனால் என் சொத்தை அடமானம் வைத்துக் கொடுத்தேன். வாதியை எனக்கு எப்படி தெரியும் என்றால் நேரடியாக தெரியாது என் மகள் மூலம் அறிமுகம். வாதிக்கு அடமான பத்திரம் நான் எழுதிக் கொடுத்தது உண்மையா என்றால் உண்மைதான். அடமான பத்திரம் 23 லட்சத்திற்கு எழுதிக் கொடுத்தோம் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு சட்ட அறிவிப்பு. ஒன்று வாதியின் வழக்கறிஞர் எனக்கு அனுப்பினார் என்றால் ஆமாம். நான் பதில் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பிரமாண வாக்குமூலத்தில் சில தொகைகளை வாதிக்கு செலுத்திவிட்டதாக சொல்லும் சூழலில் அது சம்பந்தப்பட்ட ஆவணம் ஏதேனும் ஒப்படைத்திருக்கிறேனா என்றால் எனக்குத் தெரியாது. என் வழக்கறிஞருக்கு தெரியும். என்னுடைய பிரமாணத்தை நிரூபணம் செய்யும் வகையில். சரியான ஆவணம் எதுவும் ஒப்படைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. என் மகள் கரூரில் இருக்கிறார். வாதி எவ்வளவு கேட்கிறார் வட்டி எவ்வளவு என்பது என் மகளை பரிசீலித்து ஆறு மாத கால அவகாசம் வழங்கினால் உரிய தொகையை செலுத்துவதற்கு தயாராக இருக்கிறேன். மகளை அனுசரித்து கேட்டு தெரிவிக்கிறேன்.

Sd/-S.Nagarajan,
Principal District Judge,
Kancheepuram.